Ministry of Education
Education for Knowledge Society Project
Funded by the Asian Development Bank

ADB EKSP
Education for Knowledge Society Project

எனது இல : ED/03/45/IT/Pro.Ed.Software Com V 2010.02.25

சகல அரச பாடசாலைகளினதும் அதிபர்கள் மற்றும்
கணனி கற்கை மத்திய நிலையத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்கள் ஊடாக
சகல ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு

## பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கான ஆக்கத்திறன் மிக்க கல்வி மென்பொருள் ,ஆக்கப் போட்டித் தொடர்

அரச பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான 2009ஆம் ஆண்டு கல்வி மென்பொருள் ஆக்கப் போட்டிக்காக மாகாண மட்டத்தில் பங்கேற்கும் ஆற்றல் உங்களுக்கும் உருவாகி இருப்பதாக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன். இப்போட்டி கல்வி அமைச்சின் அறிவைக் கேந்திரமாகக் கொண்ட சமூகத்திற்கான செயற்திட்டத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் இலங்கை மைக்ரோசொப்ற் நிறுவகம் உட்பட தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள பல நிறுவனங்களினால் இப்போட்டித்தொடருக்கு அனுசரனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த போட்டிநிகழ்ச்சிக்கான மேலதிக தகவல்கள www.schoolnet.lk கொடுக்கப்பட்டுள்ளதுடன் சுற்றிக்கையினை Download செய்வதற்கு அனுசரனை வழங்கப்பட்டுள்ளது.

### 1. பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள்

1. பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்காக 02 பிரிவுகளின் கீழ் இப்போட்டியை நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாகாண மட்டத்தில் அதிகமான மென்பொருட்களை முன்வைக்கும் பாடசாலைக்கு 10,000 ரூபா பணப்பரிசிலுடன் விசேடமான புலமைப்பரிசிலும் வழங்கப்படும்.

#### ஆசிரியர்களுக்கான போட்டி

ஆசிரியர்களுக்கான போட்டி 1-8தர பிரிவு, 9-11 தர பிரிவு மற்றும் 12-13 தரங்களுக்காக கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கான போட்டிகளாக 03 பிரிவுகளின் கீழ் நடாத்த இருப்பதுடன், பிரிவுகளுக்குமாக உரிய வெற்றியீட்டிய ஆசிரியர்களுக்கா கல்விப் புலமைப்பரிசில் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். ஆத்துடன் வெற்றியீட்டும் ஆசிரியர்களுக்காக குறைந்த காலத்தில் முடிக்கக்கூடிய புலமைப்பரிசில்கள் செயற்திட்டத்தினால் வழங்கப்படும்.

| இடம் | பரிசில்கள் தொடர்பான விபரங்கள் |
|---|---|
| 1வது இடம் | ரொக்கப் பணம் ரூ.10,000, ICT புலமைப்பரிசில் மற்றும் பெறுமதி மிக்க சான்றிதழ் |
| 2வது இடம் | ரொக்கப் பணம் ரூ. 5,000, ICT புலமைப்பரிசில் மற்றும் பெறுமதி மிக்க சான்றிதழ் |
| 3வது இடம் | ரொக்கப் பணம் ரூ. 3,000, ICT புலமைப்பரிசில் மற்றும் பெறுமதி மிக்க சான்றிதழ் |
| 4-10வது இடம் | ஒருவருக்கு ரொக்கப்பணமாக ரூ.2000, ICT புலமைப்பரிசில் மற்றும் பெறுமதி மிக்க சான்றிதழ் |

Ministry of Education,
Isurupaya,
Battaramulla,
Sri Lanka

Isuru Programme Manager :94(0)60-2604360
Fax :94(0)11-2784362
E-mail :isuruschools@moe.gov.lk

EKSP Project Director :94(0) 11-2784868
Office :94(0) 11-2786703
Fax :94(0) 11-2784362
E-mail :pd-semp@moe.gov.lk
sempedi@sltnet.lk

## மாணவர்களுக்கான போட்டி

மாணவர்களுக்கான போட்டி 1-8 தரத்தின் மாணவர்கள், 9-11 தரத்தின் மாணவர்கள் மற்றும் 12-13 தரத்தின் மாணவர்கள் என 03 பிரிவுகளின் கீழ் தனித்தனியாக போட்டி நடைபெற இருப்பதுடன் முதலாவது இரண்டு பிரிவினருக்குரிய மாணவர்களில் வெற்றியீட்டியவர்களுக்காக கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு பரிசில்கள், கல்விப் புலமைப்பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

| இடம் | புரிசில்கள் தொடர்பான விபரங்கள் |
|---|---|
| 1வது இடம் | ரோக்கப் பணம் ரூ.10,000, ICT புலமைப்பரிசில் மற்றும் பெறுமதி மிக்க சான்றிதழ் |
| 2வது இடம் | ரோக்கப் பணம் ரூ.5,000, ICT புலமைப்பரிசில் மற்றும் பெறுமதி மிக்க சான்றிதழ் |
| 3வது இடம் | ரோக்கப் பணம் ரூ.3,000, ICT புலமைப்பரிசில் மற்றும் பெறுமதி மிக்க சான்றிதழ் |
| 4-10வது இடம் | ஒருவருக்கு ரொக்கப்பணமாக ரூ.2000, ICT புலமைப்பரிசில் மற்றும் பெறுமதி மிக்க சான்றிதழ் |

இதற்காக 12-13 தர மாணவ மாணவிகளின் ஆக்கங்களை மதிப்பீடு செய்யும்போது உயர்தர பிரதான பாடவிதானம் சார்ந்த மென்பொருள் பயன்பாட்டை பிரபல்யப்படுத்துவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு தனித்தனியான பாடநெறிகளுக்காக மாகாண மட்டத்தில் மற்றும் தேசிய மட்டத்தில் விசேட திறமைச் சான்றிதழ், கல்வி புலமைப்பரிசில் மற்றும் பரிசில்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

| படைப்புக்கள் | பரிசில்கள் தொடர்பான விபரங்கள் |
|---|---|
| உயர்தர விஞ்ஞானப் பிரிவின் சிறந்த ஆக்கம் | ரொக்கப் பணம் ரூ.4,000, ICT புலமைப்பரிசில் மற்றும் பெறுமதி மிக்க சான்றிதழ் |
| உயர்தர கணிதப் பிரிவின் சிறந்த ஆக்கம் | ரொக்கப் பணம் ரூ.4,000, ICT புலமைப்பரிசில் மற்றும் பெறுமதி மிக்க சான்றிதழ் |
| உயர்தர கலைப் பிரிவின் சிறந்த ஆக்கம் | ரொக்கப் பணம் ரூ.4,000, ICT புலமைப்பரிசில் மற்றும் பெறுமதி மிக்க சான்றிதழ் |
| உயர்தர வர்த்தகப் பிரிவின் சிறந்த ஆக்கம் | ஒருவருக்கு ரொக்கப்பணமாக ரூ.4000, ICT புலமைப்பரிசில் மற்றும் பெறுமதி மிக்க சான்றிதழ் |

வெற்றியாளர்களுக்காக மேலே குறிப்பிடப்பட்டவாறு ரொக்கப்பணம், தகவல் தொழில்நுட்ப கல்வி புலமைப்பரிசிலுடன் பெறுமதி மிக்க சான்றிதழ்களை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு மேலதிகமாக இப்போட்டியில் கலந்துகொள்ளும் சகலருக்கும் பெறுமதி மிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும். போட்டிக்காக சமர்ப்பிக்கப்படும் மென்பொருள் ஆக்கங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் மென்பொருள் ஆக்கங்களை பிரதிசெய்து தேவையான மேலதிக அபிவிருத்திகளை மேற்கொண்டதன் பின்னர் School Net வசதிகள் ஊடாக நாடு பூராகவும் உள்ள கல்லூரிகளின் பயன்பாட்டுக்காக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்போட்டியில் தங்களது கல்லூரியின் சகல ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு திறந்த அடிப்படையில் கலந்துகொள்ள முடிவதுடன் மாணவர்களினால் சமர்ப்பிக்கப்படும் ஆக்கங்களை 2010 ஜுன் 10ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் கல்லூரியின் மதிப்பீட்டுக்காக அதிபருக்கு சமர்ப்பிக்கவேண்டும். மாணவர்களினால் சமர்ப்பிக்கப்படும் மென்பொருள் முதற் சுற்றில் கல்லூரியில் மதிப்பீட்டுக் குழுவினால் தெளிவான நெகிழ்வுத் தன்மையுடன் மதிப்பீட்டிற்குட்படுத்த வேண்டும்.

மாகாண மட்டத்தில் முதலாவது மற்றும் இரண்டாவது இடங்களைப் பெறும் வெற்றியாளர்களான ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஆக்கங்கள் அவ்வவ் உரிய குழுவுக்கமைய இறுதியில் தேசிய மட்டத்தில் முதலாவது இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றுக்கொள்ளும் ஆக்கங்களாகத் தேர்ந்தெடுத்து சமர்ப்பிக்கப்படுவதுடன் உரிய பிரிவுகளின் வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் கல்விப் புலமைப்பரிசில் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

உயர்தர பாடவிதானத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள விசேட திறமைப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொள்ளும் ஆக்கங்கள் தேசிய மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் சமர்ப்பிக்கப்படுவதுடன் அவ்வவ் பாடவிதானத்தின் கீழ் சிறந்த ஆக்கங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் வெற்றியாளர்களுக்கு பரிசில்கள், கல்விப் புலமைப்பரிசில் மற்றும் பெறுமதி மிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.

## 2. போட்டிக்கான பொது நிபந்தனைகள்

1. ஒரு கல்லூரியில் எந்த ஒரு ஆசிரியர் மாணவருக்கும் வரையறையின்றி கல்வி மென்பொருள் ஆக்கப்போட்டித் தொடரில் கலந்துகொள்ள முடியும். ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆக்கங்களைச் சமர்ப்பிக்கும்போது தாம் போட்டியிடும் பிரிவுக்குரிய தரங்களின் ஆக்கங்களை மாத்திரம் சமர்ப்பிக்க வேண்டும். ஆக்கங்களை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் மாத்திரம் சமர்ப்பிக்க முடியும்.

   மாணவர்களின் ஆக்கங்கள் 1-8, 9-11 தரங்கள் மற்றும் 12-13 தரங்களின் பிரதான பாடவிதானங்கள் 4இன் கீழ் உட்பட்டதான ஆக்கமாக மூன்று பிரிவுகளின் கீழும் ஆசிரியர்களின் ஆக்கங்கள் 1-8, 9-11 மற்றும் 12-13 தரங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்காக என மூன்று பிரிவுகளின் கீழும் போட்டி நடைபெறும்.

2. இம்மென்பொருள் ஆக்கம் பாடசாலை பாடவிதானத்திற்குப் பொருந்தக்கூடியவாறு அறிவு விருத்தியடையக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

3. போட்டியாளர்களின் ஆக்க சிந்தனை, அதனைப் பயன்படுத்துபவருக்கு மென்பொருள் ஆக்கம் மூலம் சமர்ப்பிக்கப்படும் முறைகள் தொடர்பாக கூடுதலாகக் கவனம் செலுத்தவேண்டும்.

4. அவ்வவ் பாடசாலைகளின் கணினி ஆய்வுகூடங்களில் உள்ள மென்பொருள் (Software) மற்றும் வன்பொருளை (Hardware) அடிப்படையாகக் கொண்டு ஆக்கங்கள் நடுவர் சபைக்கு காண்பிக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

5. சகல ஆக்கங்களும் அவ்வவ் ஆசிரியர்கள் அல்லது மாணவர்களின் ஆக்கமாக அதிபரினால் உறுதிப்படுத்தி உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பவேண்டும். (இணைப்பு 01 ஐப் பார்க்க)

6. மாகாண கல்விப் பணிப்பாளரினால் பெயரிட்டு நியமிக்கப்பட்டுள்ள நடுவர் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக கருத வேண்டும்.

7. சகல ஆக்கங்களையும் தனித்தனியாக இறுவெட்டில் (CD) இல் பிரதிசெய்து போட்டிக்காக சமர்ப்பிக்க வேண்டும்.

8. சகல சமர்ப்பிப்புக்களுக்காகவும் பயன்படுத்தும் சிங்கள மற்றும் தமிழ் எழுத்து (Fonts) மேற்கூறப்பட்ட இறுவெட்டில் உள்ளடக்கி அனுப்புவது அத்தியவசியமாகும். மத்தியஸ்த்தம் வகிக்பவர்களுக்காக இலகுவாக இருப்பதற்காக மேற்படி ஒழுங்குகளை தாங்கள் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டும்.

9. ஆசிரியராக இருப்பின் இறுவெட்டு மற்றும் கடித உறையில் ஆசிரியரின் பெயர் மென்பொருள் ஆக்கப்பட்டது எப்பாடத்திற்காக மற்றும் உரிய தரத்தைப் போன்று கல்லூரியின் பெயரையும் குறிப்பிட்டு அனுப்புவது அவசியமாகும்.

10. மாணவராயின் இறுவெட்டுக்கள் மற்றும் கடித உறையில் பெயர், கற்கும் தரம், மென்பொருள் ஆக்கம் எப்பாடத்திற்காக மற்றும் உரிய தரத்தைப் போன்று கல்லூரியின் பெயரையும் குறிப்பிடுவது அவசியமாகும்.

11. ஆக்கங்கள் 15 நிமிடங்கள் அல்லது அதனை விடக் குறைந்த கால எல்லைக்கு வரையறுக்கப்பட்டதாக இருக்கவேண்டும். (மென்பொருள் கணனிப் பயன்பாடு தொடர்பாக 15 நிமிடங்கள் அல்லது அதை விடக் குறைந்த காலத்தில் நடுவர் சபைக்கு பார்க்கக்கூடியதாக இருக்கவேண்டும்.)

*அவ்வாறிருந்த போதிலும் சமர்ப்பிக்கப்படும் இவ்வாக்கங்கள் குறைந்தபட்சம் 40 நிமிட கால எல்லைக்காக பாடத்திற்குரிய மென்பொருள் ஆக்கமாக இருக்கவேண்டியதுடன் அதன் மூலம் உரிய தரத்தின் பாடம் மற்றும் மென்பொருளுக்குரிய பாட நோக்கத்தை மேற்கொள்வதற்காக சித்தியடைந்த பாடத்தை மேலே குறிப்பிடப்பட்டவாறு 15 நிமிடங்களில் காண்பிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். அத்துடன் சிறுவர் கற்கை மீள்செயற்பாடுகள் (Intractive Learning) இற்காக சந்தர்ப்பம் வழங்கக்கூடியவாறு மற்றும் இறுதியில் பாடத்தின் நோக்கத்தை மதிப்பீட்டிற்குட்படுத்தக்கூடியதாக இருக்கவேண்டும்.*

12. சகல ஆக்கங்களும் மைக்ரோசொப்ற் மென்பொருள் Visual Basic, Visual Studio, Dot Net, Power Point உதவியுடன் தயாரிக்கவேண்டும்.

13. சமர்ப்பிக்கப்படும் சகல மென்பொருள் ஆக்கங்களும் கல்வி அமைச்சின் அனுபவத்தினை மூலாமகக்கொண்ட சமூகத்திற்கான கல்வி செயற்திட்டத்திற்கு (EKSP) உரியதாக இருப்பதுடன் அவை மீண்டும் ஆக்கவியலாளர்களுக்கு பொறுப்பளிக்கப்பட மாட்டாது.

14. 2010 ஜுன் 15ஆம் திகதி போட்டிக்காக சகல மென்பொருள் ஆக்கங்களையும் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் தினம் எனக் கருத வேண்டும்.

15. மாகாண மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் சகல போட்டியாளர்களுக்கும் தமது ஆக்கத்தின் பிரதி (CD) 03ஐ பாதுகாப்பு உறையினுள் இட்டு மாகாண செயற்திட்ட அலுவலகத்திற்கு பொறுப்பளிக்க வேண்டும்.

16. பாடசாலை மட்டத்தில் வெற்றி பெறும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடைய ஆக்கங்கள் மாகாண மட்டத்திலும் வெற்றி பெறுகின்றனவையாக இருந்தால் அவ் வெற்றி பெறும் அனைத்து ஆக்கங்களும் 2010 ஆகஸ்ட் மாதம் 31ம் திகதிக்கு முன்பதாக பிரதான செயற்திட்ட காரியாலயத்திற்கு கிடைக்கப்பெறுமாறு செய்யவும். அத்துடன் முதல் 10 இடங்களையும் பெறும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடைய பெயர்ப்பட்டியலை 2010 ஆகஸ்ட் 31ம் திகதிக்கு முன்பதாக கிடைக்க வழிவகை செய்யவும்.

## 2. ஆசிரியர்களின் ஆக்க மதிப்பீடு

- சகல ஆக்கங்களையும் இதனுடன் அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரித்து விபரங்களைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும்.
- ஆசிரியர்களின் ஆக்கங்களும் இடைநிலைக்கல்வி நவீனமயச் செயற்திட்டத்தின் மாகாண செயற்திட்ட அலுவலகத்தின் ஊடாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள நடுவர் சபையினால் இதனுடன் உள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மதிப்பீட்டிற்குட்படுத்தப்படும்.
- ஆசிரியர்களினால் சமர்ப்பிக்கப்படும் ஆக்கங்கள் 2010 ஜுன் 15ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய ஆவணப்படுத்தி அதிபரின் ஒப்பம் மற்றும் பதவி முத்திரையுடன் அம்மாதிரிப்படிவத்தை இடைநிலைக் கல்வி நவீனமய செயற்றிட்டத்தின் மாகாண செயற்திட்ட அலுவலகத்திற்கு கையளிக்க வேண்டும். (இணைப்பு 2ஐப் பார்க்கவும்.)
- ஆசிரியர்களின் ஆக்கங்களை அனுப்பும்போது 1-8, 9-11 மற்றும் 12-13 பிரிவுகளுக்குரிய ஆக்கங்களை வேறுபடுத்தி தனித்தனியான பட்டியலாக தயாரித்து அனுப்ப தயவாய் கருத்திற்கொள்ளவும்.

## 3. மாணவர்களின் ஆக்க மதிப்பீடு

- 2010 ஜுன் 15ஆம் திகதியன்று மாணவர்களினால் கையளிக்கப்பட்ட ஆக்கங்களை முதலாவது சுற்றின் பாடசாலை மட்டத்தில் மதிப்பீட்டிற்குட்படுத்தப்பட்டதன் பின்னர் உரிய விபரங்களுடன் ஜுலை 15ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாகாண செயற்திட்ட அலுவலகத்திற்கு பொறுப்பளிக்க வேண்டும்.
- ஆக்கத்திறன் விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். (இணைப்பு 03ஐப் பார்க்கவும்)
- அதிபரின் தலைமையில் கணனி ஆய்வுகூடத்திற்குப் பொறுப்பான ஆசிரியர் மற்றும் தகவல் தொடர்புசாதனத் தொழில்நுட்ப (ICT) பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்கள் உட்பட நான்கு பேர்களை விடக் குறையாத நடுவர் சபையினால் மென்பொருள் ஆக்கங்களை பாடசாலை மட்டத்தில் மதிப்பீட்டிற்குட்படுத்த வேண்டும்.
- மென்பொருள் ஆக்கத்திற்குரிய பாடவிடயங்களை மதிப்பீட்டிற்குட்படுத்துவதற்காக ஆக்கத்திற்கு உரியதான பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியரையும் பங்கேற்கச்செய்யவேண்டும்.
- ஆக்கங்களை மதிப்பீட்டிற்குட்படுத்துவதற்காக உரிய புள்ளி வழங்கும் முறை இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 4ஐப் பார்க்கவும்)
- 1-8, 9-11 மற்றும் 12-13 தரங்களுக்கான மாணவர் ஆக்கங்களில் பாடசாலையிலிருந்து முதலாவது இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றுக்கொள்ளும் ஆக்கங்கள் இறுதிச் சுற்றிற்கு அனுப்பப்படும்.
- அவ்வவ் தரங்களின் பரம்பலுக்கமைய முதலாவது இரண்டாவது மூன்றாவது இடங்களுக்காக உரிய ஆக்கங்களை இனங்காணக்கூடியவாறு தனித்தனியாகப் பெயரிட்டு ஏனைய சகல ஆக்கங்களுடனும் 2010 ஜீலை மாதம் 15ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுபவத்தினை மூலமாகக்கொண்ட சமூகத்திற்கான கல்விச்செயற்திட்டத்தின் (EKSP) மாகாண செயற்றிட்ட அலுவலகத்திற்கு கையளிக்க வேண்டும்.
- சகல ஆக்கங்களும் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய ஆவணப்படுத்தி அதிபரின் ஒப்பம் மற்றும் பதவி முத்திரையை வைத்து மாகாண செயற்திட்ட அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு அனுப்பும்போது 1-8 தரத்திற்கான ஆக்கம், 9-11 தரத்திற்கான ஆக்கம் மற்றும் 12-13 தரத்திற்கான ஆக்கம் என தனித்தனியாக ஆவணப்படுத்தி தயாரித்து சமர்ப்பித்தல் அவசியமாகும்.
- மேலே குறிப்பிடப்பட்டுள்ள நடுவர் சபையினால் இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள புள்ளி முறையைப் பயன்படுத்தி மாகாண மட்டத்தில் மாணவர்களின் ஆக்கங்களைத் தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். (இணைப்பு 04ஐப் பார்க்கவும்)

## 4. மாகாண மட்டத்தில் மென்பொருள் ஆக்கம் மற்றும் மதிப்பீட்டின் நடுவர் சபையின் உள்ளடக்கம்

மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் மேற்கூறப்பட்ட நடுவர் சபை நியமிக்கப்படுவதுடன் கீழே குறிப்பிடப்பட்டவாறு குறைந்தபட்சம் 05பேர்களைக் கொண்டதாக நடுவர் சபை நியமிக்கப்படவேண்டும்.

**<u>நடுவர் சபையின் உள்ளடக்கம்</u>**

1. மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்லது அவரினால் நியமிக்கப்பட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் /உதவிக் கல்விப் பணிப்பாளர்
2. இடைநிலைக் கல்வி நவீனமயச் செயற்திட்டத்தின் மாகாண செயற்திட்ட முகாமையாளர்கள்
3. மாகாண தகவல் தொழில்நுட்ப இணைப்பு உத்தியோகத்தர்
4. மாகாண /வலய தகவல் தொழில்நுட்ப மத்திய நிலைய உத்தியோகத்தர்கள்
5. பல்கலைக்கழகம் அல்லது கல்விக் கல்லூரியின் விரிவுரையாளர்

நடுவர் சபையின் அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது மன்பொருள் தொடர்பாக அறிவு கொண்ட, பாடங்கள் தொடர்பாக அறிவு கொண்ட மற்றும் சிங்களம், தமிழ் ஆங்கில மொழியை விளங்கிக்கொள்ளக்கூடிய அங்கத்தவர்களை உள்ளடக்குவது மிகவும் பொருத்தமாகும்.

அத்தியவசிய சந்தர்ப்பங்களில் இவ்வாறு ஒரு நடுவர் சபையை விட கூடுதலான எண்ணிக்கையை நியமித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க முடியும். அத்துடன் மிக விசேடமான சந்தர்ப்பங்களில் மாத்திரம் மேற்கூறப்பட்ட நடுவர் சபையின் எண்ணிக்கையைக் மாற்றுவதற்கும் மாகாண மட்டத்தில் பொருத்தமானவாறு தீர்மானம் எடுக்க முடிகிறது. அத்துடன் சகல சந்தர்ப்பங்களிலும் பாட அறிவின் பகுதிகள் தென்படக்கூடியவாறு மிகச் சிறந்த மட்டத்தில் நடுவர் சபையை நியமிக்கும் பொறுப்பு மாகாண சபைக்குரியதாகும். (பாடசாலை மட்டத்தில் மாணவர் ஆக்க மதிப்பீட்டிற்கான நடுவர் சபை இக்கடிதத்தில் இலக்கம் 4இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளது.)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளைப் பின்பற்றி 2010ஆம் ஆண்டு கல்வி மென்பொருள் ஆக்கப்போட்டித் தொடரை பாடசாலை மற்றும் மாகாண மட்டத்தில் ஒழுங்குசெய்து அமுல்படுத்துவதற்காக தாங்கள் காண்பிக்கும் ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்பு கல்வித் துறையின் தகவல் தொழில்நுட்ப அறிவின் கொள்ளளவை மேம்படுத்தவும் கணனியை கற்றல் கற்பித்தல் கருவியாகப் பயன்படுத்தி நாட்டின் சிறார்களின் தகவல் தொழில்நுட்ப தகைமையை மேம்படுத்தவும் செயற்திட்டத்தினால் வழங்கப்படும் பிரயத்தனங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தயவாய் கேட்டுக்கொள்கிறேன்.

***அனுர திசாநாயக்க***
செயற்திட்டப் பணிப்பாளர்
அனுபவத்தினை மூலமாகக்கொண்ட சமூகத்திற்கான கல்வி செயற்திட்டம்
கல்வி அமைச்சின் செயலாளருக்காக.

பிரதிகள் :

1. மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் - தகவல் மற்றும் தேவையான உதவிகளை வழங்க.
2. பணிப்பாளர், தகவல் தொழில்நுட்ப கல்விக் கிளை – தகவல், விசேட கவனிப்பு மற்றும் தேவையான உதவிக்காக.
3. சகல மாகாண செயற்திட்ட முகாமையாளர்கள் - மாகாணக் கல்வி மென்பொருள் போட்டித் தொடரின் ஒழுங்கமைப்புகளை மேற்கொள்வதற்காக.
4. சகல மாகாண தகவல் தொடர்பாடல் உத்தியோகத்தர்கள் - போட்டித் தொடரை ஒழுங்குசெய்ய உதவுவதற்காக.

**இணைப்பு 01**

## மாதிரி விண்ணப்பப் படிவம்

| ஆசிரியரின் ஆக்கங்கள் | | | மாணவர்களின் ஆக்கங்கள் | | |
|---|---|---|---|---|---|
| 1-8 | 9-11 | 12-13 | 1-8 | 9-11 | 12-13 |

(பொருத்தமற்ற சொல்லை வெட்டி விடவும்)

1. பெயர் :........................................................................................................................................
   (மாணவர் குழுவாக இருப்பின் சகல பெயர்களையும் குறிப்பிடுக)

2. சான்றிதழில் குறிப்பிட வேண்டிய பெயரை ஆங்கில எழுத்தில் குறிப்பிடவும் :.......................................

3. மாகாணம் : ........................................................................................................................................
4. பாடசாலையின் பெயர் மற்றும் முகவரி :..............................................................................................
5. மாணவராயின் தரம் :
   ஆசிரியராயின் கற்பிக்கும் பாடம் } :.......................................................................................................

6. மென்பொருளுக்குரிய பாடத்துறை :
   உரிய தரம் :.......................................................................................................
7. தங்களது ஆக்கங்கள் தொடர்பாக சுருக்கமாக அறிமுகப்படுத்தவும் :.........................................................
   ........................................................................................................................................
   ........................................................................................................................................
8. உங்களது ஆக்கம் சிறந்த மட்டத்தை எட்ட நீங்கள் தயாரித்த மென்பொருளில் பயன்படுத்தப்பட்ட உபாயங்கள் மூலம் ஆசிரிய மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் எவை ?..........................................................................................................................
   ........................................................................................................................................
9. உங்களது ஆக்கங்களைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தி மென்பொருளைப் பெயரிடவும்.
   ........................................................................................................................................
   ........................................................................................................................................

இம்மென்பொருள் எனது /எமது சுய ஆக்கமானது என உறுதி செய்வதுடன் ஏனையோரின் ஆக்கங்களை பிரதி எடுத்து (Copy) செய்யப்பட்டதாக நடுவர் சபைக்கு விளங்கும் பட்சத்தில் அவர்களின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கிறேன். என்னால் /எம்மால் சமர்ப்பிக்கப்பட்ட மென்பொருள் தேவைப்படும் பட்சத்தில் பிரதிசெய்து பாடசாலை கல்வி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த அனுமதி வழங்குகிறேன்.

ஒப்பம் :……………………………..

திகதி :……………………………..

அதிபரின் உறுதியுரை

இம்மென்பொருள் எமது பாடசாலையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரிய /ஆசிரியை மாணவர் /மாணவியின் ஆக்கம் என உறுதி செய்கிறேன்.

திகதி :………………...

……………………..
அதிபரின் ஒப்பமும்
அதிபரின் பதவிமுத்திரையும்

**இணைப்பு 02**

***ஆசிரியர்களின் ஆக்கம் தரம் 1-8 / 9-11 மற்றும் 12-13***

**(தேவையற்ற சொற்களை நீக்கவும்)**

ஆசிரியர்களின் ஆக்கத்துடன் இம்மாதிரிப்படிவத்துடன் பூரணப்படுத்தி செயற்திட்ட அலுவலகத்திற்கு பொறுப்பளிக்கவும்.

பாடசாலையின் பெயரும் முகவரியும் :-

பாடசாலையின் தொலைபேசி இலக்கம் :-

| தொடர் இலக்கம் (CD) இறுவெட்டுக்களில் இடவும்) | ஆசிரியரின் பெயரை ஆங்கிலத்தில் குறிப்பிடவும். (Write in block capitals) | ஆக்கத்திற்குரிய தொனிப்பொருள் /பாடம் | ஆக்கத்திற்குரிய தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

மொத்த ஆக்கங்களின் எண்ணிக்கை :…………………………..

……………………………….

அதிபரின் ஒப்பமும் பதவி முத்திரையும் திகதி:……………..

**இணைப்பு 03**

***மாணவர்களின் ஆக்கம் தரம் 1-8 / 9-11 மற்றும் 12-13***
**(தேவையற்ற சொற்களை நீக்கவும்)**

மாணவர்களின் ஆக்கத்துடன் இம்மாதிரிப்படிவத்தை பூரணப்படுத்தி செயற்திட்ட அலுவலகத்திற்கு பொறுப்பளிக்கவும்.

பாடசாலையின் பெயரும் முகவரியும் :-…………………………………………………………..

பாடசாலையின் தொலைபேசி இலக்கம் :-……………………………………………………..

| தொடர் இலக்கம் (CD) இறுவெட்டுக்களில் இடவும்) | மாணவர் /மாணவியின் பெயரை ஆங்கிலத்தில் குறிப்பிடவும். (Write in block capitals) | இணைப்பு 02 | ஆக்கத்திற்குரிய தரம் | உயர்தரமாக இருப்பின் | |
|---|---|---|---|---|---|
| | | | | பாடவிதானம் | பாடம் |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

மொத்த ஆக்கங்களின் எண்ணிக்கை :…………………………..

…………………………………………
அதிபரின் ஒப்பமும் பதவி முத்திரையும் திகதி :………………..

**இணைப்பு 04**

***ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஆக்கங்களை மதிப்பீடு செய்வதற்காக புள்ளி வழங்கும் முறை***

- போட்டிக்குரிய சட்டங்களுக்கிணங்கி ஆக்கங்கள் கொண்ட மென்பொருளில் மாத்திரம் மதிப்பீட்டிற்குட்படுத்த வேண்டும்.
- உயர்ந்தபட்ச புள்ளிகளின் எண்ணிக்கை 100 ஆகும்.
- நடுவர் சபைக்கு அவசியப்படின் ஆக்கம் தொடர்பாக தெளிவுகளைப் பெற்றுக்கொள்ள ஆக்கவியலாளர்களை நடுவர் சபைக்கு அழைக்க முடியும்.

1. சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆக்கத்தின் பாடத்திற்குரிய தொடர்பு - 20 புள்ளி
2. உதாரணம், ஆக்கத்திறன் மற்றும் உள்ளடக்கங்களின் சரியான தன்மை - 25 புள்ளி
3. ஆக்கங்கள் கொண்ட விடயங்களை பயன்படுத்துவோருக்கு விளக்குவதற்காக இருக்கும் உபாயங்கள் மற்றும் அவை ஆக்கத்திற்குள் பயன்படுத்தும் மட்டம் - 20 புள்ளி
4. கணனி ஆய்வுகூடத்தில் உள்ள தொழில்நுட்ப கருவிகள் மற்றும் மென்பொருள் ஆக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ள வட்டம் - 10 புள்ளி
5. மென்பொருளில் உள்ள பாடப் பகுதி முறையான ஒப்பீடுகளுடன் தொடராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறை - 10 புள்ளி
6. நிற உள்ளடக்கம், படங்கள், எழுத்தின் அளவு என்பன (Animation) பக்க ஆக்கம் மற்றும் க்'டம் இன்றி விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருத்தல் - 10 புள்ளி
7. மேலதிக பாட விடயங்களுக்காக பயன்படுத்துவோரை உட்படுத்தல் (உரிய இணையத்தளம், நூல்கள் மற்றும் சஞ்சிகைகளின் வாசகங்களை பெயரிடல்) - 05 புள்ளி

➢ மாணவர் ஆக்க மதிப்பீட்டின் போது தரம் 1-8 வரை மாணவர் ஆக்கங்களை தனியாகவும் தரம் 9-11இற்கான ஆக்கங்களை தனியாகவும் 12-13ஆம் தர பாடவிதானங்களுக்கான ஆக்கங்களை தனியாகவும் மதிப்பீட்டிற்குட்படுத்துவது அவசியமாகும்.

➢ ஆசிரியர்களின் ஆக்கங்களை மதிப்பீடு செய்யும் போது தரம் 1-8, தரம் 9-11 மற்றும் தரம் 12-13 இன் ஆக்கங்களை தனித்தனியாக மதிப்பீட்டிற்குட்படுத்த வேண்டும்.

➢ இதற்கு மேலதிகமாக மாணவர் ஆக்கங்களை உயர்தர விஞ்ஞானம், உயர்தர கணிதம், உயர்தர வர்த்தகம் மற்றும் உயர்தர கலை ஆகிய பாடவிதானங்களுக்காக சிறந்த ஆக்கங்கள் வீதம் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**விசேட குறிப்பு :** **மாணவர் ஆக்கம் தொடர்பாக மாகாண மட்டத்தில் மதிப்பீட்டிற்குட்படுத்தப்படுவது பாடசாலை மட்டத்தில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடங்களைப் பெற்றுக்கொள்ளும் ஆக்கங்கள் மாத்திரமாகும்.**